## பொது நிலையினர் பணிக்குழு

### புனித வின்சென்ட் தேபவுல் சபை

**27.12.2022 :** சேத்பட் வட்டார சபை சார்பில் சுவிகார நிதி உதவி பெறும் கிளைச்சபைகளில் கிறிஸ்துமஸ் & புத்தாண்டு விழா மத்தியசபையின் மூத்த ஆலோசகர் சகோ. அ.பெரிய நாயகம் தலைமையில் வட்டாரசபை தலைவர். பு.ஜேசுதாஸ் முன்னிலையில் பங்கு தந்தையர்களின் ஆதரவோடு கொண்டாடப்பட்டு நிதி உதவி வழுங்கப்பட்டது. வந்தவாசி, செய்யார், மழுவங்கருணை. நல்லூர் கிளைச்சபைகளுக்கு பணமாகவும், பொருளாகவும் வழங்கப்பட்டன.

**28.12.2022 :** காட்பாடி வட்டார சபை சார்பில் சேவூர் கிளைச்சபை புதிய தலைவர் தேர்தலும், புதிய பொறுப்பாளர்களும் மூத்த உறுப்பினர் சகோ Y.D. மூர்த்தி மற்றும் வட்டாரத்தலைவர் சகோ. செபாஸ்டின் இருதயராஜ் முன்னிலையில் நடைபெற்றது. புதிய தலைவராக சகோ. அபிரகாம் தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் காட்பாடி வட்டார தலைவர் செபஸ்டின் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. வேலூர் மத்திய சபைத் தலைவர். ம.சார்லஸ் ஆரோக்கியராஜ் பொருளர் மு.செயபால் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். காட்பாடி, சேவூர், கிறிஸ்டியான்பேட்டை, அரக்கோணம், ஆப்பிள்ஸ்பெட் போன்ற கிளைச் சபைகளிலிருந்து பயனாளிகள் கலந்து கொண்டனர். மூத்த உறுப்பினர். வில்சன் கலந்து கொண்டார். இந்த விழா ஏற்பாடுகளை வட்டாரத் தலைவர் செபஸ்டின், செயலர் திலீப்ஆனந், பொருளாளர் கிரகோரி செய்திருந்தார்கள். முடிவில் நற்கருணை ஆசீரோடு இக்கூட்டம் இனிதே முடிந்தது.

**08.01.2023 :** போளூர் வட்டார சபை சார்பில், போளூர் திரு இருதய ஆண்டவர் கிளைச்சபை சந்திப்பு நடைபெற்றது. வேலூர் மத்தியசபைத் தலைவர். ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், மூத்த

துணைத்தலைவர் அ.தோம்னிக் கலந்து கொண்டனர். கிறிஸ்து பிறப்பு விழா & புத்தாண்டு விழா சார்பில் ஏழை மக்களுக்கு தலா ரூ.30/-ம் அரிசி, புத்தாடைகள் என சுமார் 66 பேருக்கு வழங்கப்பட்டது. பங்குதந்தையோடு இணைந்து கிளைச்சபை தலைவர் அந்தோணியம்மாள், ஜெயசீலி, சரவணன், அதிரூபன், செல்வி ஆகியோர் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பின்னர் 12.00 மணியளவில் தச்சாம்பாடி கிளைச் சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருள்பணி. குரியாகோஸ் காரிக்காட், உதவி பங்குதந்தை. சேகர் அடிகளாரை சந்தித்து கிளைச்சபை புத்தாக்கம் பெற செய்வதை உறுதி செய்யப்பட்டது. இறுதியல் 50 ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. மேலும் சபையில் பழைய உறுப்பினர்களோடு, புதிதாக இளைஞர்களை சேர்க்கவும் பரிந்துரை செய்யப்பட்டது. தொடர்ந்து ஏழைகளுக்கான பணியை தொடர உறுதி செய்த பின்னர் தந்தையின் ஆசீரோடு கூட்டம் முடிவுற்றது.

**கல்வி உதவி படிவங்கள் :** 26.01.2023 மத்தியசபை சார்பில் இந்திய தேசிய சபைக்கு உயர்கல்வி, தொழிற்கல்வி படிவங்கள் (10) அனுப்பப்பட்டன. வித்திய ஜோதி கல்வி படிவங்கள் (29) பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சுவிகார நிதிபெறாத கிளைச் சபைகளிலிருந்து பெறப்பட்டு அனுப்பப்பட்டது.

**04.02.2023 & 05.02.2023** தமிழக மண்டல ஒருங்கிணைப்புக் குழு சார்பில் மத்திய சபை தலைவர் பொறுப்பாளர்களுக்கான பயற்சிப்பாசறையை “பொறுப்பாளர்களின் பொறுப்புணர்வு” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்தார்.

சிவகங்கை வியான்னி மறைபணி நிலையத்தில் இந்திய தேசிய சபைத் தலைவர் மங்கள்ராஜ் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில், வேலூர் மத்திய சபைத் தலைவர் ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், துணைத்தலைவர் எஸ். பெரியநாயகம், செயலாளர் சா.அந்தோணிராஜ், பொருளாளர் மு.ஜெயபால் ஆகியோர் கலந்து

கொண்டனர். பல்வேறு தலைப்புகளில் உரையாடலும், விவாதமும் செய்யப்பட்டது.

சிவகங்கை முன்னாள் ஆயர் மேதகு. சூசை மாணிக்கம் ஆண்டகையின் ஞாயிறு திருப்பலியும், தமிழக மண்டல ஒருங்கிணைப்பு குழு தலைவர் சகோ. வெள்ளத்துரையின் வழிகாட்டுதலும் சிறப்பாய் இருந்தது. கூட்ட முடிவுக்கு பின்னர் சுற்றுலா திருத்தலம் இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் ஆலய தரிசிப்பும் நடைபெற்றது.

கூட்டத்தில் முடிவு எடுத்தபடி மாதம் ஒரு வட்டார சபைக் கூட்டத்திலும், கிளைச்சபைக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உற்சாகமூட்டி சபையை வளர்த்தெடுப்பது என முடிவெடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| அருட்திரு. ஜெ.ஜெயபிரகாஷ் | ம.சார்லஸ் ஆரோக்கியராஜ் |
| இயக்குநர் | தலைவர் |
| பக்க சபைகள் - வேலூர். | வேலூர் மத்தியசபை |

## மரியாயின் சேனை

25.1.22 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் சத்துவாச்சாரி புனித சூசையப்பர் பங்கில் பேரருட்பணி. மலையப்பன் அடிகளார் தலைமையில் மரியாயின் பிரசீடியம் கொ.தலைவி மற்றும் து.தலைவி அவர்களால் புதுப்பிக்கப்பட்டது. சகோ. ரத்னா மேரி அவர்களால் சேனையாரின் பிரமாணிக்கம், அன்னை மீது கொண்டுள்ள பற்று, ஆற்றவேண்டிய சேனை பணிகள் பற்றி விளக்கி கூறப்பட்டது. மேலும் வீடுகளை சந்தித்து ஒருவர் மற்றொருவரை அழைத்து வர (Each one Catch one). கேட்டுக் கொண்டார். அருட்சகோதரி. அன்பு அவர்கள் பழைய சேனையாளரின் வீடு சந்தித்து தானும் சேனையாளரோடு வந்து ஆள்சேர்பதாக ஆலோசனை கூறினார். இறுதி ஜெபத்துடன் பகல் 12.30 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது. வருகைதந்த அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

11.2.23 சனிக்கிழமை மருத்துவாம்பாடி பங்கில் அருள்தந்தை. யேசுதாஸ் அடிகளார் தலைமையில் அப்பங்கிலுள்ள பெண்கள் பிரசீடியம் மிக ஆடம்பரமாக விழாகோலத்துடன் லூர்து அன்னை

திருவிழா அன்று துவங்கப்பட்டது. இதில் மொத்தம் 70 பெண்கள் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் தந்தை அவர்களின் செலவில் சீருடை, சேனை பேட்ஜ், ஜெபகொத்து அனைத்தும் வழங்கப்பட்டது. மிகப்பெரிய அளவிலான சேனையாளரை கொ.து.தலைவி மற்றும் தலைவர் அவர்களாலும் அருட்தந்தை உதவியோடு 4 பிரசீடியமாக பிரித்து சேனை ஆரம்பிக்கப்பட்டது. இதில் வீரலூர் உதவி பங்குதந்தை. அற்புதராஜ் அவர்களும் இவ்விழா சிறப்புற வாழ்த்தினார். மேலும் கீழ்நாத்தூர் அவர்களும் கலந்துகொண்டு விழா சிறப்புற அமைய காரணமாய் இருந்தனர். மருத்துவாம்பாடி பங்குதந்தையின் பெரும் முயற்சியால் நம்மறைமாவட்டத்தில் ஒரே நாளில் 4 பிரசீடியங்கள் தொடங்கப்பட்டது என்பது பெருமைக்குரியது. மகிழ்ச்சிக்குரியது. பின் தந்தையர்களின் ஆடம்பர கூட்டுத் திருப்பலியுடன் இவ்விழா மிகச் சிறந்த முறையில் முடிவுற்றது.

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகோ. ரத்னாமேரி**
கொமித்சிய தலைவி, வேலூர்

## அரசு வேலைபெற குரூப் 4 மற்றும் VAO தேர்வு

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC- Tamil Nadu Public Service Commission) குரூப் 4 மற்றும் VAO தேர்வை அறிவித்துள்ளது. 7300 அரசுப்பணிகளுக்கு தேர்வு நடைபெறும். 2023 ஜூலை மாதம் 24-ம் தேதி தேர்வு நடைபெறும்.

**கல்வித் தகுதி : 10-ம் வகுப்பு தேர்ச்சி**

**வயது வரம்பு :**

பொது பிரிவு : 21-32 வயது வரை

சிறப்பு பிரிவு : 21-42 வயது வரை
(SC / ST / MBC / Widow / BC)

**குரூப் 4 தேர்வு மூலம் நிரப்பப்படும் பதவிகள்**

TNPSC குரூப் 4 தேர்வானது தற்போது 7 விதமான பதவிகளுக்கு நடத்தப்படுகிறது. அவை இளநிலை உதவியாளர் (Junior Assistant), தட்டச்சர் (Typist), சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno-Typist), கிராம நிர்வாக அலுவலர் (Village Administrative Officer), வரித் தண்டலர் (Bill Collector), நில அளவர் (Field Surveyor), வரைவாளர் (Draftsman).

மாதச் சம்பளம் : ரூ.16,600 முதல் 20,600 வரை கிடைக்கும்.

தேர்வுமுறை :

குரூப் 4 தேர்வானது ஒரேயொரு எழுத்து தேர்வை அடிப்படையாகக் கொண்டது. எழுத்துத் தேர்வில் மொத்தம் 200 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் 1.5 மதிப்பெண்கள்; என மொத்தம் 300 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெறும். குரூப் 4 தேர்வின் வினாத்தாளில் இரண்டு பகுதிகளாக வினாக்கள் கேட்கப்படும். அனைத்து வினாக்களும் கொள்குறி வகையில் (Objective Type) கேட்கப்படும். OMR தாளில் பதில் குறிக்க வேண்டும். 3 மணி நேர தேர்வு (காலை 09.30 மணி முதல் 12.30 மணி வரை) ஆகும்.

**பாடத்திட்டம் / மதிப்பெண்**

I. பொதுத்தமிழ்

முதல் பகுதியான மொழிப்பாடப்பிரிவில் தமிழ்மொழி பாடத்தில் 100 வினாக்கள் இடம் பெறும். மொத்த மதிப்பெண் (100 X 1.5 marks = 150) 150 ஆகும். தற்போது தமிழக அரசு, தமிழ் பாடத்தாளில் குறைந்தபட்சம் 45 மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றால் மட்டுமே, பிற தாள்களை மதிப்பீடு செய்யும் வகையில் தேர்வு நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது பகுதியில் 100 வினாக்கள் பொது அறிவு பகுதியிலிருந்து கேட்கப்படும். அவற்றில் 75-பொது அறிவு வினாக்களும், 25-திறனறிவு தேர்வு (Aptitude Test) வினாக்களும் இருக்கும். இந்த 100 கேள்விகளுக்கும் மதிப்பெண் (100 X 1.5 marks = 150) 150 ஆகும்.

இரண்டு பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 300 மதிப்ெண்களில் தேர்வுபெற 90 மதிப்பெண்களுக்கு மேல் எடுக்க வேண்டும்.

**அ. பொது அறிவு பாடங்கள் (General Knowledge)**

- **வரலாறு / நாகரீகம் : (History / Culture)** சிந்து சமவெளி நாகரிகம், குப்தர்கள், டில்லி சுல்தான், முகலாயர்கள், மராத்தியர்கள்; விஜய நகர மற்றும் பாமினி அரசுகள், தென்னிந்திய வரலாறு, தமிழர் நாகரீகம் திராவிட வரலாறு அரசியல் கட்சிகள் மக்கள் நலத் திட்டங்கள்.

- **இந்திய அரசியல் :** (Indian Polity) அரசியலமைப்பு, முகவுரை, அரசியலமைப்பின் சிறப்பம்சங்கள, குடியுரிமை, கடமைகள் மற்றும் உரிமைகள், ஒன்றிய மற்றும் மாநில நிர்வாகம், பாராளுமன்றம், பஞ்சாயத்துராஜ்.

- **அறிவியல் :** (General Science) இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல்

- **புவியியல் :** (Geography) புவி மற்றும் பிரபஞ்சம், சூரியக் குடும்பம், பருவகாற்றுகள், வானிலை, நீர் ஆதாரங்கள், மண், கனித வளங்கள், காடுகள், வன உயிரினங்கள்.

- **பொருளாதாரம் :** (Economics) ஐந்தாண்டு திட்டங்கள், நிலச்சீர்திருத்தம், வேளாண் மற்றும் வணிக வளர்ச்சி. தமிழக பொருளாதார வளர்ச்சி.

- **இந்திய தேசிய இயக்கம் :** (Indian National Movement) தேசிய எழுச்சி விடுதலைப் போராட்டத்தில் காந்தி, நேரு, தாகூர், இராஜாஜி, வ.உ.சி, பெரியார், பாரதியார் மற்றும் சில தலைவர்கள்.
- Current Events / Development Administration in Tamilnadu

**ஆ. திறனறிவு பாடங்கள் (Aptitude / Mental ability Test)**

தர்க்க அறிவு (Reasoning) மற்றும் கணிதத்தைக் கொண்டது. இதில் சுருக்குதல் (Simplification), எண்ணியல் (Number System), அளவியல் போன்ற கணக்கியல் பாடங்கள் உள்ளன. எழுத்துத் தேர்வில் தகுதி பெற்றவர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவர். அதிலும் தகுதி பெறுபவர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிடங்கள் வழங்கப்படும்.

போட்டியாளர்கள் கூட்டம் அதிகம். ஆகவே தங்களை நன்கு தயாரித்துக் கொண்டு தேர்வு எழுதவும். இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும் தான் அரசு தேர்வு ஆண்டுதோறும் நடத்தப்பட்டு பணிஅமர்வு அளிக்கப்படுகிறுது. அனைவரும் நம்பிக்கையோடு தேர்வு எழுதி வெற்றிபெறுமாறு வாழ்த்துகிறேன்.

**விண்ணப்பம்: ஆன்லைன் (Online)**

| | |
|---|---|
| தொடங்கும் நாள் | : 30 மார்ச் 2023 |
| இறுதிநாள் | : 28 ஏப்ரல் 2023 |

மேலும் விபரங்களுக்கு : **www.tnpscexams.in**

அருள்பணி. பூபதி லூர்துசாமி
செயலர்
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு